**செய்தி வெளியீடு எண்: 095** **நாள்: 04.02.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

**பொதுத் (தேர்தல்கள் –2 ) துறை,**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட தொடர்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் மாவட்ட தொடர்பு மையங்களுக்கு ஒரே மாதிரியான 1950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வழங்கப்பட்டுள்ளது. வாக்காளர் பதிவு , படிவத்தின் நிலை, புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை, வாக்குச்சாவடி மற்றும் சட்டமன்ற தொகுதி, வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் தேர்தல்கள் பற்றிய விவரங்களைக் கேட்டுப் பெறலாம். வாக்காளர்கள் தங்களது கருத்துக்கள், ஆலோசனைகள், புகார்கள் ஆகியவற்றையும் மேற்கண்ட கட்டணமில்லா தொலைபேசி எண் 1950 மூலம் தெரிவிக்கலாம். அந்தந்த மாவட்ட தொடர்பு மையங்கள் தங்களது மாவட்டம் குறித்த கேள்விகளுக்கு உரிய பதிலளிப்பார்கள்.

மாவட்ட தொடர்பு மையங்களைத் தவிர மாநில தொடர்பு மையம் தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் 180042521950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வாக்காளர் வசதிக்காக தேசிய வாக்காளர் தினமான 25.01.2019 முதல் செயல்பட்டு வருகின்றது. மாநில தொடர்பு மையம் பொதுவான புகார்களையும், கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கையாளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**